பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
விக்னேஸ்வரா
பல்பொருள்வாணிபம்
923நல்லூர் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி985)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை ( 03-11-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 319

## ★ மீண்டும் வன்னிக்குச் செல்வேன் ★ ★ ★

# சமாதான பேச்சு வார்த்தைக்கு

# "பிரபா" நிபந்தனை விதிக்கவில்லை!

## செய்தியாளர் மத்தியில் எரிக்சோல்ஹைம்

(கொழும்பிலிருந்து விஷேட நிருபர்)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆர்வமாகவும்,மிகுந்த அக்கறையுடனும் இருக்கின்றார் என்பதை அவருடன் வன்னியில் பேசியபோது அறிய முடிந்தது.

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் எவ்விதமான நிபந்தனைகளும் விதிக்கவில்லையாயினும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தேவையான விதந்துரைகளையும் வழிவகைகளையும் மட்டுமே அவர் எம்மிடம் பேச்சுவார்த்தையின் போது தெரிவித்துள்ளார்

இவ்வாறு நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக்சோல்ஹையும் நேற்று நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டின்போது தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 4-45 மணிக்குக் கொழும்பு திரும்பிய விசேட பிரதிநிதி எரிக்ஷோல்ஹைம்கொள்ளுப்பிட்டியில் ஹொட்டல் ஒன்றில் பத்திரிகையாளருக்குப்

(8ஆம் பக்கம் பார்க்க)

### அரசின் அனுமதியுடனே 'பிரபாவுடன்' பேச்சு நடந்தது

## நோர்வேயின் விசேட தூதுக்குழு ஜனாதிபதியை இன்று சந்திக்கும்!

(கொழும்பு)

வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக இன்று பிற்பகல் ஜனாதிபதியைநோர்வே தூதுக்குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என்று நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்ஷோல்ஹைம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலிகளுடனான இந்தப்பேச்சுவார்த்தை மேலும் தொடரும் எனவும் நோர்வேப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசின் அனுமதி பெற்றுத்தான் நோர்வே தூதுக்குழு வன்னி சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் பேச்சு நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பிரபா- எரிக்சோல்ஹைம் பேச்சு எதுவும் எனக்குத் தெரியாது

### பிரதமர்ரட்ணசிறி ஆச்சரியம்

(கொழும்பு)

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரனுக்கும், நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹைமிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைதொடர்பாக தமக்கு ஏதும்தெரியாதுஎன்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று செய்தியாளர்களிடம் ஆச்சரியத்துடன் தெரிவித்துள்ளார்,

இதுதொடர்பாக பிரதமர் பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவிக்கையில்,

நேர்வேபிரதிநிதிகள் குழு எந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைநடத்தினார் என்று அறிக்கை ஒன்றைத் தர வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் பயங்கரவாத அமைப்புடன் பேச்சு நடத்துவதை நான் எதிர்க்கவில்லை என்றும், வேறுஎந்த வழியிலும் கெடுபிடிகளைக் கைக்கொள்ள விரும்பவில்லை என்றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## அரசசார்பற்ற பிரதிநிதிகளை வன்னியில் நோர்வேகுழு சந்தித்துபேச்சுநடத்தியது

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் பெயர் குறிப்பிடப்படாத இடத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த நோர்வே குழுவினர் நேற்று அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை வன்னியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் தினமும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நோர்வே குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து நோர்வேக் குழுவினர் நேற்றைய தினமே கொழும்பு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ம)

## வானில்தோன்றும்அதிசயம் மூன்று கிரகங்கள் ஒன்றாகக் காட்சி

(கொழும்பு)

மூன்று கிரகங்கள் ஏககாலத்தில் வானில் தோன்றும் அதிசயக்காட்சியை இன்று தெளிவாகப் பார்க்கமுடியும் சனி, சுக்கிரன் (வெள்ளி), வியாழன் (குரு) ஆகிய மூன்று கிரகங்களையும் இன்று பூமியில் இருந்து தெளிவாகப் பார்க்க முடி

(8ஆம்பக்கம்பார்க்க)

## நோர்வே பிரதிநிதியை காங்கிரஸ் இன்று சந்திக்கும்!

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள நோர்வேயின் விஷேட பிரதிநிதியை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என்று கட்சியின் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேற்று முன்தினம் நோர்வேயின் விஷேட பிரதிநிதிசந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் இப்பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பது குறிப்பிடத்தககது.

இன்று நடைபெறவுள்ள சந்திப்பின் போது கட்சித் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான விநாயகமூர்த்தி செயலாளர் என். குமரகுருபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## சந்திரசேகரனை விடுதலைசெய்யாவிட்டால் சட்டநடவடிக்கை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் விடுதலை செய்யப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சந்திரசேகரன் கைது செய்யப்பட்டு நேற்றுடன் 72 மணித்தியாலங்கள் முடிவடைந்துள்ளதனால் அவர் நீதி மன்றத்தில் ஆஜர் செய்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை வெட்டிக் கொலை சகோதரிகள் மீது வல்லுறவு அக்கிரமலையில் கொடூரம்

வட்டக் கொடை அக்கிரமலைப் பகுதியில் உடன் பிறந்த இரு தமிழ் சகோதரிகளை இனந்தெரியாத கோஷ்டி ஒன்று பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியதோடு அவர்களின் தந்தையை வெட்டிக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று மாலை நடைபெற்றுள்ளது இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; வட்டகொடை அக்கிரமலைப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற (8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ மாவீரர் தினத்தை அடுத்து

## யாழ்குடாவில் திடீர் சுற்றிவளைப்புக்கள் வீதித்தடைகள் வீடுவீடாக சோதனை!

மாவீரர் தினத்தையொட்டி யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக அதிகாலை வேளையில் கிராமம் கிராமமாக சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சென்று படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேடுதலுக்கு முன்பாக இராணுவத்தினர் சலாடின் ரக கவசவாகனத்தில் ஒலி பெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுத்து வருகின்றனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

சிறு விளம்பரம்

சமந்துக்கூரை ஓடுகள் (LMRS)
LOCES SHEET INDUSTRIES INUVIL.

ஜ.ரி.சற. அரசசார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்பு செய்யப்படும். வீட்டுத் திட்டங்கள், பாடசாலை கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சீமெந்துக்கூரைஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.
இயந்திரம்மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையும் விற்பனை நிலையமும் லோசேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை இணுவில்.
(1832)


## அடிக்கல் நாட்டல்

(மந்திகை)

மண்டான் சனசமூக நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும்விழா அண்மையில் எஸ். குணாநந்தம் தலைமையில் நடைபெற்றது.

இக்கட்டிட அமைப்பிற்கென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ - 23)

## நூலிற்கு பரிசு

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தின் பிரபல கவிஞர்களுள் ஒருவரும், இசையாசிரியருமான, மீசாலை ஏ. கே ஏரம்பமூர்த்தியின் ''கீர்த்தன மாலை'' நூல், திருகோணமலை கல்வி அமைச்சு, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின், இலக்கிய நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது.

இலக்கிய நூல், பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு திருமலை புனிதமரியாள் கல்லூரிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [-க103]

## சமாதான நீதிவான்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சமாதான நீதிவான்களாக இருவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அருளம்பலம் அருந்தவநாதன் (நீர்வேலி) நாகர் ஆறுமுகம் (தெல்லிப்பளை) ஆகியோரே மல்லாகம் நீதிவான் சுப்பிரமணியத்தின் முன்னிலையில் சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். (க-12)

## நாளை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்புவகுப்பிற்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும், கிராமஅலுவலர்களை சிறப்புத் திறமையின் மீது அதியுயர்தரத்திற்கு பதவியுயர்வளித்தல் பரீட்சை நாளை யாவேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் வலயக்கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளும் வண்ணம் பரீட்சார்த்திகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை நிலையத்திலும் அனுமதிஅட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் 31-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 149012 ஏ | 149012 பி |
| 149012 சி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 138997 ஏ | 147908 ஏ |
| 147989 ஏ | 156297 ஏ |
| 156297 பி | 156308 ஏ |
| 156308 பி | 159226 ஏ |
| 159226 பி | 159245 ஏ |
| 159284 ஏ | 159584 பி |
| 159284 சி | 159284 டி |
| 159284 ஈ | 159373 ஏ |
| 159373 பி | 160942 ஏ |
| 161005 ஏ | 161005 பி |
| 161005 சி | 161012 ஏ |
| 161012 பி | 161012 சி |
| 161016 ஏ | 161016 பி |
| 161016 சி | 161098 ஏ |
| 161093 பி | 161098 ஈ |
| 191221 ஏ | 161221 பி |
| 161423 ஏ | 161423 பி |
| 163154 ஏ | 163154 பி |
| 163154 சி | 163154 டி |
| 163209 ஏ | 163209 பி |
| 163209 சி | 163285 ஏ |
| 163285 பி | 163285 சி |
| 163303 ஏ | 163303 பி |
| 163303 சி | 163303 டி |
| 163333 ஏ | 163365 ஏ |
| 163365 பி | 163407 ஏ |
| 163407 பி | 153419 ஏ |
| 163419 பி | 163451 ஏ |
| 163451 பி | 153451 சி |
| 163451 டி | 163451 ஈ |
| 163451 எவ் | 163497 ஏ |
| 163497 பி | 163497 சி |
| 163497 டி | 163497 ஈ |
| 163498 ஏ | 163498 பி |
| 163537 ஏ | 163578 ஏ |
| 163578 பி | 163580 ஏ |
| 163580 பி | 163580 சி |
| 165952 ஏ | 165952 பி |
| 165952 சி | 165952 டி |
| 165953 ஏ | 165953 பி |
| 165953 சி | 165972 ஏ |
| 165972 பி | 165988 ஏ |
| 165988 பி | 165988 சி |
| 165988 டி | 165050 ஏ |
| 166050 பி | 166065 ஏ |
| 166065 பி | 166065 சி |
| 166084 ஏ | 166084 பி |
| 166108 ஏ | 166108 பி |
| 166130 ஏ | 166130 பி |
| 166130 சி | 166130 டி |
| 166156 ஏ | 166156 பி |
| 166156 சி | 166159 ஏ |
| 166159 பி | 166214 ஏ |
| 166214 பி | 166214 சி |
| 166214 டி | 166219 ஏ |
| 166219 பி | 166225 ஏ |
| 166225பி | 166270 ஏ |
| 166270பி | 166281 ஏ |
| 166231 பி | 166281 சி |
| 166283 ஏ | 166291 ஏ |
| 166291 பி | 166295 ஏ |
| 166295 பி | 166307 ஏ |
| 166307 பி | 166310 ஏ |
| 166321 ஏ | 166321 பி |
| 166344 ஏ | 166344 பி |
| 166348 ஏ | 166352 ஏ |
| 166355 ஏ | 166355 பி |
| 166362 எ | 166369 ஏ |
| 166369 பி | 166369 சி |
| 166387 ஏ | 166388 ஏ |
| 166388 பி | 166415 ஏ |
| 168475 ஏ | 168495 ஏ |
| 168502 ஏ | 168502 பி |
| 168502 சி | 168502 டி |
| 168569 ஏ | 168645 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 147651 ஏ | 147651 பி |
| 149008 ஏ | 149008 பி |
| 149008 சி | 149008 டி |
| 149097 ஏ | 149097 பி |
| 149620 ஏ | 149620 பி |
| 149620 சி | 149675 ஏ |
| 149725 ஏ | 149725 பி |
| 149798 ஏ | 150870 ஏ |
| 150870 பி | 150870 சி |
| 150870 டி | 150889 ஏ |
| 150889 பி | 152259 ஏ |
| 152259 பி | 152261 ஏ |
| 152261 பி | 152261 சி |
| 152281 ஏ | 152281 பி |
| 153108 ஏ | 152108 பி |
| 153509 ஏ | 153509 பி |
| 153509 சி | 154294 ஏ |
| 154358 ஏ | 154408 ஏ |
| 154408 பி | 154408 சி |
| 154408 டி | 154457 ஏ |
| 154457 பி | 154468 ஏ |
| 154468 பி | 154468 சி |
| 154519 ஏ | 154519 பி |
| 154519 சி | 154523 ஏ |
| 154529 ஏ | 154529 பி |
| 154529 சி | 154529 டி |
| 154551 ஏ | 154551 பி |
| 154577 ஏ | 154577 பி |
| 154577 சி | 157263 ஏ |
| 157263 பி | 157263 சி |
| 157263 டி | 159496 ஏ |
| 159496 பி | 159516 ஏ |
| 159516 பி | 159516 சி |
| 159549 ஏ | 159549 பி |
| 159549 சி | 159573 ஏ |
| 159573 பி | 159573 சி |
| 159597 ஏ | 159597 பி |
| 159621 ஏ | 159621 பி |
| 159621 சி | 159621 டி |
| 159641 ஏ | 159641 பி |
| 159641 சி | 159655 ஏ |
| 159655 பி | 159655 பி |
| 159667 ஏ | 159667 பி |
| 159667 சி | 159667 டி |
| 159667 ஈ | 159667எவ் |
| 159676 ஏ | 159726 ஏ |
| 159730 எ | 159771 ஏ |
| 159771 பி | 159771 சி |
| 159771 டி | 69771 ஈ |
| 159788 ஏ | 159788 பி |
| 162627 ஏ | 162627 பி |
| 162627 சி | 162722 ஏ |
| 162723 ஏ | 162723 பி |
| 162723 சி | 162738 ஏ |
| 162738 பி | 162742 ஏ |
| 162742 பி | 162886 ஏ |
| 162893 எ | 162893 பி |
| 162893 சி | 162947 ஏ |
| 162947 பி | 162951 ஏ |
| 162951 பி | 163648 ஏ |
| 163648 பி | 163649 ஏ |
| 163663 ஏ | 163667 ஏ |
| 163667 பி | 163667 சி |
| 163667 டி | 163668 ஏ |
| 163668 பி | 163680 ஏ |
| 163684 ஏ | 163684 பி |
| 163687 ஏ | 163687 பி |
| 163694 ஏ | 163694 பி |
| 163700 ஏ | 163700 பி |
| 163708 ஏ | 163708 பி |
| 163709 ஏ | 163709 பி |
| 163710 ஏ | 163728 ஏ |
| 163728 பி | 163732 ஏ |
| 163732 பி | 163733 ஏ |
| 163733 பி | 163733 சி |
| 163733 டி | 163733 ஈ |
| 163740 ஏ | 163740 பி |
| 163744 ஏ | 163744 பி |
| 163752 ஏ | 563752 பி |
| 163752 சி | 163753 ஏ |
| 163757 ஏ | 163757 பி |
| 163757 சி | 163758 ஏ |
| 163760 ஏ | 163764 ஏ |
| 163764 பி | 163769 ஏ |
| 163769 பி | 163782 ஏ |
| 163817 ஏ | 163817 பி |
| 163819 ஏ | 163819 பி |
| 163824 ஏ | 163824 பி |
| 163830 ஏ | 163870 ஏ |
| 163871 ஏ | 163871 பி |
| 163883 ஏ | 163883 பி |
| 163884 ஏ | 163885 ஏ |
| 163885 பி | 167006 ஏ |
| 167006 பி | 167018 ஏ |
| 167019 ஏ | 167021 ஏ |
| 167021 பி | 167021 சி |
| 167021 டி | 167021 ஈ |
| 167026 ஏ | 167026 பி |
| 167030 ஏ | 167030 பி |
| 167030 சி | 167050 ஏ |
| 167050 பி | 167050 சி |
| 167051 ஏ | 167051 பி |
| 167060 ஏ | 167060 பி |
| 167071 ஏ | 167085 ஏ |
| 167085 பி | 167088 ஏ |
| 167088 பி | 167102 ஏ |
| 167102 பி | 167104 ஏ |
| 167105 ஏ | 167105 பி |
| 167105 சி | 167490 ஏ |
| 167501 ஏ | 167501 பி |
| 167501 சி | 167522 ஏ |
| 167528 ஏ | 167531 ஏ |
| 167531 பி | 167531 சி |
| 167536 ஏ | 167546 ஏ |
| 167546 பி | 168276 ஏ |
| 168276 பி | 168276 சி |
| 168276 டி | 168276 ஈ |
| 168276 எவ் | 168276 ஜி |
| 168277 ஏ | 168277 பி |
| 166359 ஏ | 166359 பி |
| 168609 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 145305 ஏ | 145324 ஏ |
| 162802 ஏ | 162802 பி |
| 162832 ஏ | 162842 ஏ |
| 162842 பி | 162842 சி |
| 162842 டி | 162847 ஏ |
| 162970 ஏ | 162970 பி |
| 162970 சி | 162970 டி |
| 162995 ஏ | 162995 பி |
| 162995 சி | 162996 ஏ |
| 162996 பி | 162996 சி |
| 162996 டி | 162996 ஈ |
| 167497 ஏ | 167497 பி |
| 167499 ஏ | 167499 பி |
| 167529 ஏ | 167529 பி |
| 167529 சி | 161052 எ |
| 161372 ஏ | 161372 பி |
| 161372 சி | 163109 ஏ |
| 163509 ஏ | 163509 பி |
| 163509 சி | 163609 ஏ |
| 163609 பி | 163609 சி |
| 163620 ஏ | 163620 பி |
| 163620 சி | 163620 டி |
| 165954 ஏ | 165982 ஏ |
| 166003 ஏ | 166009 ஏ |
| 166029 ஏ | 166051 ஏ |
| 166059 எ | 166095 ஏ |
| 166095 பி | 166095 சி |
| 166095டி | 166095 ஈ |
| 166095 எவ் | 166187 ஏ |
| 166187 பி | 166187 சி |
| 166188 ஏ | 166197 ஏ |
| 166197 பி | 166206 ஏ |
| 166215 ஏ | 166248 ஏ |
| 166248 பி | 166267 ஏ |
| 166267 பி | 166312 ஏ |
| | 166328 ஏ |
| 166312 பி | 166328 பி |
| 166328 சி | 166343 பி |
| 166343 சி | 166356 ஏ |
| 166357 ஏ | 166414 ஏ |
| 168458 ஏ | 168458 பி |
| 168458 சி | |
| 168458 டி | 168458 ஈ |
| 168599 ஏ | 168636 ஏ |
| 168636 பி | 168636 சி |
| 168636 டி | 168636 ஈ |
| 168636 எவ் | 168636 ஜி |
| 168637 ஏ | 168637 பி |
| 168637 சி | 168637 டி |
| 168637 ஈ | 168638 ஏ |
| 168638 பி | 168638 சி |
| 168638 டி | 168638 ஈ |
| 168638 எவ் | 168638 ஜி |
| 168647 ஏ | |

### நெல்லிப்பளை

| | |
|---|---|
| 162546 ஏ | 162546 பி |
| 167489 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 143260 ஏ | 143260 பி |
| 157209 ஏ | 157209 பி |
| 157209 சி | 157209 டி |
| 157328 ஏ | 157328 பி |
| 157328 சி | 157328 டி |
| 157360 ஏ | 157389 ஏ |
| 157389 பி | 157389 சி |
| 157389 டி | 157389 ஈ |
| 157390 ஏ | 157390 பி |
| 157390 சி | 157642 ஏ |
| 157642 பி | 162746 ஏ |
| 162925 ஏ | 162928 ஏ |
| 162967 ஏ | 162967 பி |
| 162967 சி | 162982 ஏ |
| 162982 பி | 162986 ஏ |
| 163005 ஏ | 163032 ஏ |
| 163032 பி | 167505 ஏ |
| 167533 ஏ | 167542 ஏ |

# முல்லையில் 2 வள்ளங்கள் தாக்கி அழிப்பு

## கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பகுதிக்கு 60மைல் தொலைவில் பயணம் செய்து கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் இருவள்ளங்களையும் ஒரு தாக்குதல் வள்ளத்தையும் அழித்திருப்பதாக இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் விடுதலைப் புலிகளின் 8 வள்ளங்கள் பயணம் செய்துகொண்டிருந்த வேளை கடற்படையினர் நடத்திய தாக்குதலின் போதே இவை அழிந்திருப்பதாகவும் ஏனையவை தப்பிச் செல்ல முயன்றதாகவும் இராணுவப்பேச்சாளர் சரத் கருணாரத்னா தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளாகிய வள்ளம் ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் இருந்து அவ்வள்ளத்தில் எரிபொருள் ஏற்றி வந்திருக்கலாம் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-உ]

## பாடசாலை தரம் உயர்வு

(சுண்டிக்குழி)

நெடுந்தீவு றோமன்கத்தோலிக்க மகளிர் மகாவித்தியாலயமாக இருந்த பாடசாலை அண்மையில் மகளிர் கல்லூரியாக அரசினால் தரம் உயர்த்தப்பட்டது.

அதனை முன்னிட்டு பாடசாலை சமூகம் அதிபர் ஜெயசீலி றொட்றிக்கோவின் தலைமையில் குழு ஒன்றை அமைத்து மலர் ஒன்றினை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

புதிய அதிபரின் ஏழாண்டு சேவைக் காலத்தில் இப்பாடசாலை பல வழிகளிலும் குறிப்பாக கல்வி கலைகலாசார விளையாட்டு ஆகியவற்றிலும் பல சாதனைகள் யாழ். மாவட்ட ரீதியில் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)

## பொதுக் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டக் கல்வி அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் என்.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

அப்போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

கோப்பாய்க்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தலைவராகவும், என்.சிவகடாட்சம் செயலராகவும். ஏ.சபாநாயகம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக ஆறு பேர் தெரிவுசெய்யப்பட்டனர். [உ-79]

## பொதுக்கூட்டம்

(மந்திகை)

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். (உ-23)

## விளையாட்டு உபகரணங்கள் தயாரிப்பு

(மந்திகை)

வடமராட்சிதெற்குமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பாலர்பாடசாலைகளுக்கென இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தளபாடங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர் வி. நடராசா தெரிவித்துள்ளார்.

பிரதேசசபையின் விசேட நிதியில் இருந்து தயாரிக்கப்பட்டுவரும் இவ்உபகரணங்கள் சனசமூக நிலையங்களில்இயங்கும் தளபாட மற்றும் வசதிகள் குறைந்தபாலர் பாடசாலைகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. (உ-23))

## நேற்றுமுன்தினமும் நேற்றும் வெளியாகிய வர்த்தகமும் கணக்கியலும் பகுதி I ற்கான விடைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 2 | (2) | 4 | (3) | 4 |
| (4) | 3 | (5) | 2 | (6) | 4 |
| (7) | 2 | (8) | 4 | (9) | 4 |
| (10) | 3 | (11) | 1 | (12) | 4 |
| (13) | 3 | (14) | 2 | (15) | 2 |
| (16) | 2 | (17) | 1 | (18) | 3 |
| (19) | 2 | (20) | 1 | (21) | 2 |
| (22) | 4 | (23) | 3 | (24) | 1 |
| (25) | 3 | (26) | 2 | (27) | 4 |
| (28) | 2 | (29) | 3 | (30) | 1 |
| (31) | 3 | (32) | 1 | (33) | 3 |
| (34) | 3 | (35) | 3 | (36) | 1 |
| (37) | 3 | (38) | 2 | (39) | [illegible] |
| (40) | 3 | | | | |

# படையினரிடம் சிக்கிய 14 வயதுச் சிறுமி

## நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் படையினருக்கும்' விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின் போது படையினர் வசம், சிக்கிய 14 வயதுச் சிறுமி தற்போது பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் காங்கேசன் துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த நிலையில் படையினரிடம் மன்னாரைச் சேர்ந்த ஆறுமுகம் மலர் என்ற சிறுமியே அகப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா இச் சிறுமியைப் பார்வை இட்டுள்ளார்.

மேற்படி சிறுமி மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாம். (த)

# பாராளுமன்ற செயலர் அவசர உத்தரவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல விடுதியில் தங்கியிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு வாரத்தில் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் காலக்கெடு விதித்துள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள தொடர்ந்து அங்கே தங்கியிருப்பதை அடுத்தே இவ்உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ)

# அரியாலையில் மக்கள் மீளக் குடியமர்வு

(அரியாலை)

நல்லூர் கிழக்கை அண்டிய அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆசீர்வாதப்பர் வீதி, மூத்த விநாயகர் வீதி, புவனேஸ்வரி அம்பாள் வீதி ஆகிய பகுதிகளில் கணிசமான தொகையினர் மீளக் குடியேறியுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக அப்பகுதியில் ஓரளவு சுமுக நிலை அடைந்ததை யடுத்தே மக்கள் இவ்வாறு குடியேறி வருகின்றனர். இதேவேளை சில பகுதிகளுக்கு மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது. (க-106)

# உயர்மட்ட விஷேடகுழு தலவாக்கொல்லைவிஜயம்

(பண்டாரவளை)

பண்டாரவளை படுகொலைச்சம்பவம் தொடர்பாக தலவாக்கொல்லைப் பகுதியில் இடம் பெற்ற அனர்த்தங்களை அரச உயர்மட்டக்குழு ஒன்று விசாரணையிட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி சமுர்த்தி அமைச்சர் எஸ். பி திஸாநாயக்கா' பதில் பொலிஸ் மா அதிபர் ஓ. ஈ ஆனந்தராசா, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், முத்து சிவலிங்கம், மத்தியமகாண கல்வி அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன், ஆகியோர், இந்த அரச உயர்மட்டக் குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

விகாரைக்கும் சென்று அங்குள்ள அகதிகளைக் கண்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

மலையகப்பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் உடமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட விபரங்கள் எடுக்கப்படவிருப்ப தாகவும், அகதிகளுக்கு உலர் உணவு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதா தாகவும்தெரிவிக்கப்படுகிறது. (வ)

# அடையாள அட்டை பெற

வடக்கு-கிழக்கு

# பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு

## கோரிக்கை வலுக்கிறது

(ஏறாவூர்)

வடக்கு, கிழக்கிலுள்ள பல்கலைக் கழக ஊழியர்களுக்கு இவ்வாண்டிற்கான இடர்காலக் கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக் கழகத்தில் அனைத்து பல்கலைக் கழக ஊழியர்கள் சம்மேளனத் தலைவர் கே. பி. கரலியத்த தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற விஷேட கூட்டத்தின் போது இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக தென் கிழக்குப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர் சங்கத் தலைவர் எம்எஸ்.எம். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யுத்த சூழலில் யாழ்ப்பாணம்,தென் கிழக்கு மற்றும் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு பல்கலைக் கழகங்களில் கடமையாற்றிவரும் சகல ஊழியர்களுக்கும் இடர்காலக் கொடுப்பனவு வழங்கக் கோரிய மகஜர்கள் உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக் கழக மாணிய ஆணைக் குழுவிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. (க)

# கொடிதினம்

[கோப்பாய்]

கொக்குவில் மக்கள் நலன் புரிச் சங்கத்தினால், சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்கில் 20. 10. 2000 தொடக்கம் 20. 11. 2000 வரை கொடி தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. [உ-79]

# இராசி பலன்

03 - 11 - 2000

[ஐப்பசி 18, வெள்ளி]

சப்தமி மு. இ 10. 36வரை
உத்தராடம் மு.இ7.39வரை
ராகுகாலம் 10. 34 - 12.04
சுபநேரம் 6. 04 - 7. 34
சித்தம்

**மேடம்**

நினைத்த காரியம் நிறைவேறும், மற்றவர்கள் கீழ் பணிந்து நடப்பர், தொழில் மேன்மை, அதிகாரம்.

**இடபம்**

பிரயாணம், மனக்கிலேசம், சிறு வியாதி, கட்டுப்படுதல்.

**மிதுனம்**

எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், உடல் உபாதை, காரிய தாமதம்.

**கடகம்**

வாகன வசதி, கௌரவமான நிலை, தனவரவு, பிரயாணம், சுவாரஸ்யம்.

**சிங்கம்**

# தடுத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர் மாற்றம்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரு தமிழ் இளைஞர்கள், கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம் நவரட்ணம், அருணாசலம் சுரேந்திரன் ஆகிய இரு அரசியல் கைதிகளுமே இவ்வாறு மாற்றப்பட்டவர்களாவர்.

எதுவித காரணமுமின்றிச் சிறைச் சாலை மாற்றப்பட்ட இவர்கள், மகர சிறைச்சாலையில் பெரும்பான்மையினர் கைதிகளுடன் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (உ)

# கோப்பாய் பகுதிகளில் படையினர் தேடுதல்

(அரியாலை)

கடந்த புதன்கிழமை கோப்பாயை உள்ளடக்கிய பகுதி படையினரால் ஒரே நேரத்தில் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இருந்த போதிலும் பொது மக்களின் அன்றாட கடமைகளுக்கு ஏதும் பாதிப்பு நேரவில்லை எனக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி இராச வீதி ஆகியவற்றை உள்ளடக்கிய கோப்பாய்திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளே இவ் வாறுசோதனை நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டது.

இச் சுற்றி வளைப்பு நடவடிக்கை காரணமாக வீதியில் அதிகளவு படையினர் காணப்பட்டதுடன் கல்வியங்காட்டுப் பகுதி யூடாகப் பிரயாணம் செய்வோர் சோதனை நடவடிக்கைகளின் பின்பே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் ஒரு சிலர் படையினாரல் விசாரிக்கப்பட்ட போதும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ-106)

# விளக்க மறியலில் வாடும் பதினெட்டு வாலிபர்கள்

(கொழும்பு)

பதுளை கொழும்பு வீதியில் பறகணைக்கும், ஹிஸ்துமுல்லைக்குமிடையே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்ட 18 வாலிபர்களும் நேற்று முன்தினம் பண்டாரவளை மாஜிஸ்திரேட் நீதிபதி முன்னால் ஆஜராகினர்.

இவர்களை விசாரணை செய்த நீதவான் எதிர்வரும் 9ஆம் திகதி வரை மேற்படி நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (வ)

# தரம்-5 புலமை பரிசில்

னன், ஆகியோர், இந்த அரச உயர்மட்டக் குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

இக் குழுவினர் தலவாக் கொல்லையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் தமிழ் அகதிகள் இருந்த தலவாக் கொல்லை கதிரேசன் ஆலயத்திற்கும், கிந்துலயில் புத்த

## வீதி திருத்தம்

(அரியாலை)

உடுவில் தொம்பை வீதி வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் திருத்திச் செப்பனிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் வலி தெற்குப் பிரதேச செயலகம்மற்றும் பொதுசன நூலகம் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க - 106)

## அடையாள அட்டை பெற முயற்சி

பாடசாலை மாணவர்கள் துரிதமாக தமது அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்தநான்கு மாத காலமாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க அவசியமான விண்ணப்பப்படிவம் இல்லாததனால் பாடசாலை அதிபர்கள்எதிர்பார்த்திருப்பதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க - 110)

### பண்டாரவளை படுகொலை

## தப்பிய இரு இளைஞர்களை ராணுவம் தடுத்து வைப்பு

(கொழும்பு)

அண்மையில் பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் புனர்வாழ்வு நிலையத்தில் நடத்தப்பட்ட வெறியாட்டத்தின் போது எவ்வித காயங்களும் இன்றித் தப்பிய இரு இளைஞர்கள் தியத்தலாவை இராணுவ முகாமில் விசாரணைகளின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிவராமன் சிவரூபன், சின்னத்துரை துரைராஜன் ஆகிய இரு இளைஞர்களுமே இவ்வாறு விசாரணைகளிற்குட்பட்டு வருகின்றனர்.

வெளி வேலைகளுக்காக புனர்வாழ்வு நிலைய நிர்வாகத்தினரால் வெளியே அனுப்பப்பட்ட காரணத்தினால், இவர்கள் இருவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

மான நிலை, தனவரவு, பிரயாணம், சுவாரஸ்யம்.

**சிங்கம்**

ஆரோக்கிய நிலை, பகைவர் விலகுவர், தனவரவு, காரிய ஜெயம்.

**கன்னி**

சிறு வியாதி, அமைதியின்மை, காரிய தடங்கல், பின்தங்கிய நிலை.

**துலாம்**

பயந்த சுபாவம், உஷ்ண வியாதி, நம்பிக்கைக்குறைவு, காரியம் தாமதம்.

**விருச்சிகம்**

உறவினர் உதவி, சந்தோசமான நிலை, காரியஜெயம், தனவரவு, பிரயாணம்.

**தனுசு**

வாக்கு கலகம், காரியதாமதம், கௌரவக் குறைவு, பணச் செலவு.

**மகரம்**

உடல் நலம், விருந்துபசாரம், சயன சுகம், ஆத்மீக சிந்தனை, முயற்சி பலிதம்.

**கும்பம்**

சுப செலவு, பிரயாணம், கோபப்படுதல், காரியம் தாமதம்.

**மீனம்**

நண்பர்கள் சந்திப்பு சந்தோசமான செய்தி, தனவரவு, புகழ், நினைத்த காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

★ வளவன் ★

## தரம்-5 புலமை பரிசில் பரீட்சையின்;சிலமுடிவுகள்

[யாழ்ப்பாணம்]

நடந்து முடிந்த தரம்–05 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். இருபாலை சீ. சீ த. க. பாடசாலையிலிருந்து தோற்றி சித்தியடைந்தோர் பெயர் விபரங்கள் பின்வருமாறு;

உ. தனுஜா 163, செ. அனிஸ்ரன் 146, சி. லக்சாயினி 143, சே. மதனகோபி 135. (க)

## கொழும்பில் சந்திகளை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக 5 சந்திகளை விஸ்தரிப்பதற்கு மாநகரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மேயர் ஓமர் கார்மில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்து திணைக்களமும் பொறியியல் திணைக்களமும் இணைந்து மேற்கொள்ளும் இத்திட்டம்மூன்று மாத காலத்திற்கு பூர்த்தியடையும் என எதிர்பார்ப்பதாகவும் இத்திட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (க–5)

## பொலித்தீன் பையிலிருந்து பாதணி தயாரிப்பு

(கொழும்பு)

கழிவு பொலிதீனிலிருந்து பாதணி தயாரிக்கும் முயற்சி தென்பகுதி கிராமம் ஒன்றில் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் இம்முயற்சி வெற்றி அளித்துள்ளதாகவும், மிக விரைவில் வர்த்தக ரீதியில் உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் அறியப்படுகிறது.

(க - 05)

# பொதுஅறிவுவினாக்கள்

## இல 29 தொகுப்பு: யூட்

### பின்வரும் நாடுகளின் தலை நகரங்கள் எவை

1) பாப்புவா நியூகினியா
2) பார்படோஸ்
3) வேல்ஸ்
4) பின்லாந்து
5) பொலிவியா

### பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் யாவை

6) பெனின
7) போலந்து
8) மங்கோலியா
9) மாஸிடோனியா
10) யேமன்
11) தற்போது மியாண்மர் என அழைக்கப்படும் நாட்டின் பழைய பெயர் யாது?
12) பிலிப்பைன்ஸ் நாட்டின் சுதந்திர தினம் எப்போது?
13) டங்ஸ்டான் எனும் கனியத்தை உற்பத்தி செய்யும் நாடு எது?
14) ஐக்கிய நாடுகள் சபை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
15) உலகில் முதல் சார்க் மாநாடு எப்போது? எங்கு நடைபெற்றது?
16) உலகில் அதிக மக்கள் பின்பற்றும் சமயம் எது?
17) உலக தபால் நிலைய தினம் எப்போது கொண்டாடப் படுகிறது?
18) எந்திரத் துப்பாக்கி யாரால் எப்போது கண்டுபிடிக்கப் பட்டது?
19) M.C.L எனும் பல்கலைக்கழகப் பட்டத்தின் விரிவாக்கம் யாது?
20) முதலாவது உலக கால் பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
21) மைக்ரோ சொப்ற் நிறுவனம் அண்மையில் வெளியிடவுள்ள வீடியோ கேம கணனியின் பெயர் யாது?
22) 'தமிழ்இணையம் 2000, மாநாடு அண்மையில் எங்கு நடைபெற்றது?

### பின்வரும் கணனிச் சொற்களிற்கான தமிழ்ப் பதர் யாது?

23) RAM
24) ROM
25) DISC
26) MEMORY
27) PROCESSER
28) ஐ.நா. சபையின் முதலாவது பொதுச் செயலர் யார்)
29) மூன்று தலை நகரங்களைக் கொண்ட நாடு எது?
30) உலகின் மிக உயர்ந்த அணைக்கட்டு எது?
31) கோதுமை உற்பத்தியில் முன்னணியில் உள்ள முதல் மூன்று நாடுகள் எவை?
32) தத்துவ ஞானி சோக்கிரட்டிஸ் பிறந்த நாடு எது?
33) முன்னர் றொடீசியா என அழைக்கப்பட்ட நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
34) 1995ம் ஆண்டு இடம்பெற்ற சார்க் மாநாட்டின் தலைவர் யார்?
35) சிரியா நாட்டின் சர்வதேச விமானப் பதிவுக் குறியீடு யாது?
36) இலங்கையின் தற்போதைய நிதி அமைச்சர் யார்?
37) உலகில் அதிக காலம் ஆட்சி செய்த மகாராணி யார்? அவர் எத்தநாட்டை சேர்ந்தவர்?
38) அமெரிக்க சுதந்திரச் சிலையின் மொத்த நிறை யாது?
39) அதிக காலம் ஆட்சி செய்த பிரான்சிய முடியரசர் யார்?

## பொது அறிவு வினா இல. 28

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம் வருமாறு:

★ பா. இந்திராதேவி யாழ்ப்பாணம்
★ ச. ஹபிலன் வட்டுக்கோட்டை
★ சி. திவாகரன் மட்டுவில்
★ சி. சயந்தன் வட்டுக்கோட்டை
★ உ. அனித்தா உரும்பிராய்
★ து. உமா சண்டிலிப்பாய்
★ சி. காயத்திரி நல்லூர்
★ நா. சண்முகப்பிரியா இணுவில்
★ த. வைஷ்ணவி தாவடி
★ ச. சுஜன் நல்லூர்
★ பொ. பிரணவன் ஊர்காவற்றுறை
★ சி. தாட்சாயினி நல்லூர்
★ வே. அன்ரன் றெஜினோல்ட் ஆனைக்கோட்டை
★ ஜெ. சங்கீதா கோண்டாவில்
★ அ. கனிசியஸ் மிருசுவில்

## பொது அறிவு வினா இல. 28 இற்கான விடைகள்

1) சுபிட்ஜான்
2) குவட் மாலாநகரம்
3) ஏக்ரா
4) நியாமே
5) மஸ்கட்
6) க்ரோன்
7) டொலர்
8) பாலாசி
9) பவுன்
10) றியால்
11) டயானா
12) ஜோர்ச் வாசிங்டன்
13) ரூஸோ
14) நெபு சாட்நேசர்
15) 1958
16) கியூபா
17) கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்
18) நியூ கினித்தீவு
19) விவசாயிகள தினம்
20) பெங்களூர்
21) ஆகான்
22) விவசாய வளர்ச்சிக்கான சர்வதேச நிதிக்கழகம்
23) உலக சுகாதார நிறுவனம்
24) சமாதானம்
25) சாதகம் / அனுமதிக்கப் படுகின்றது போகலாம்
26) தொற்றுநோய்

# விபத்தில் வர்த்தகர் காயம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் சிக்கிய வீடியோகடை உரிமையாளர் ஒருவர் முகத்தில் கடும் காயங்களுக்குள்ளாகி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கைதடியில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானையில் வசிக்கும் செல்லையா ரங்கநாதன் (வயது 33) என்பவரே மோட்டார் சைக்கிள், மினி பஸ் விபத்தில் சிக்கி காயமடைந்தவராவர். (க-12)

# யாழில் புதியபஸ்நிலையம் அமைக்கும் பணி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில் பஸ் நிலைய கட்டிடம் அமைக்கும் பணிகள் முழுவேகத்தில் இடம்பெற்றுவருவதாக வட–பிராந்திய போக்குவரத்து சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி கட்டிட அமைவானது 162 அடி நீளமும் 29 அடி அகலமும் கொண்டதாக, இரண்டு மேல்தட்டுக்களை கொண்டதாகவும் 15 பஸ்கள் ஒரே நேரத்தில் தரித்து நிற்கக் கூடிய தளவசதியை கொண்டதாக அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இக் கட்டட வேலைகள் துரித கதியில் நடை பெற்று வருகிறது. இவ்வருட இறுதிக்குள் வேலைகள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க–12)

# பதற்ற நிலை தணிவு வழமைபணிகளில் மக்கள்

[கொழும்பு]

நுவரெலியாப் பகுதியில் பதற்றம் தணிந்து, மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலையைத்தொடர்ந்து நுவரெலியாப் பகுதியில் இடம்பெற்ற கலவரங்களால் கடந்த சிலதினங்களாகப் பதற்றம் நிலவி வந்தது.

இப் பதற்றநிலை காரணமாக காடுகளில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

படையினரின் பாதுகாப்புடன் பஸ்சேவை நடைபெறுகின்றது. வேலைக்குச் செல்லாது வீடுகளில் முடங்கிக் கிடந்தோரும் வேலைக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். [செ]

## இலங்கை கிரிக்கெட் விவகாரம்

# விசாரணைக்கு இந்தியாவை நாடுகிறது இலங்கை அரசு

[கொழும்பு]

இலங்கையின் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க துணைத் தலைவர் அரவிந்தடி சில்வா ஆகியோர் கிரிக்கெட் போட்டிச் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளுக்கு உதவுமாறு இந்தியாவை இலங்கை கேட்டுள்ளது.

இந்திய மத்திய புலனாய்வு பணியகம், இது தொடர்பாக நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையின் பிரதிகளை தந்துதவுமாறும் இந்திய கிரிக்கட் சபை இலங்கை கிரிக்கெட் சபையை கோரியுள்ளது.

1994 இல் லக்னோவில் நடந்த ரெஸ்ற் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற அர்ஜுன ரணதுங்கவும் அரவிந்த டி சில்வாவும் பந்தயத்தில் உதவியதாக மத்தா குப்தா என்ற பந்தயக்காரர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இருந்த போதிலும், சம்பந்தப்பட்ட இருவரும் தம் மீதான குற்றங்களை மறுத்திருப்பது தெரிந்ததே.

இதே சமயம், அர்ஜுன ரணதுங்க கடந்த ஓகஸ்ற் மாதம் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ]

## யாழ். செயலக களஞ்சிய திருட்டு

# காப்பாளரை 12ஆம் திகதி வரை

39) அதிக காலம் ஆட்சி செய்த பிரான்சிய முடியரசர் யார்?

40) இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார்?

குறிப்பு:-

இதற்கான விடைகள் 09-11-2000க்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்

## அறிவியல் பகுதி
## வினா இல: 29

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..............................

சொந்த முகவரி;: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

படுகின்றது போகலாம்

26) தொற்றுநோய்

27) ஒலிம்பிக்

28) வெற்றி ஆரம்பம்

29) இஸ்ரேலின் இரகசிய சேவை

30) ஜி. என். ஏ.

31) தீபெத்

32) கார்ரி காஸ்பரோவ்

33) விஸ்வநாதன் ஆனந்த்

34) விவிலியன் ரிச்சர்ட்ஸ்

35) கோபன் ஹேகன்

36) தேசியசபை

37) கவிஞர் கண்ணதாசன்

38) சர்தார் நிகல் நிங் 1908 இல்

39) பண்டார வன்னியன்

40) வட்டவளை

## 30 லட்சம் ரூபா நட்டம்

(கொழும்பு)

மலையகப் பகுதியில் இடம் பெற்ற வன்செயல் சம்பவங்களில் அப் பகுதியில் சேவையாற்றி வந்த மூன்று புகையிரதங்களிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சேதத்தினால் புகையிரத திணைக்களத்திற்கு 30 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-05)

## காப்பாளரை 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கவும்
## நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக களஞ்சிய திருட்டு தொடர்பான விசாரணைகள் கடந்த 30 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் இடம்பெற்றது.

இவ் விசாரணையின்போது களஞ்சிய காப்பாளர் இராஜரட்ணம் கதிர்காமநாதர் (வயது - 60) வண்ணார் பண்ணை யாழ். நீதிவானின் உத்தரவின் பேரில் இம்மாதம் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

1995 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு மே மாதம் வரை குருநகர் அரசகளஞ்சியத்திற்கு ஒவ்வொரு கப்பலிலும் எடுத்துவரப்பட்ட உணவுப் பொருட்களில் ஏற்பட்ட இழப்புக்கள் சகலவற்றையும் களஞ்சிய திருட்டில் இழந்த பொருட்களின் பெறுமதியாக கணிப்பு செய்து பட்டியல் தயாரித்து யாழ். நீதிமன்றத்திற்கும் பொலிஸாருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் காட்டப்பட்ட 4908965 ரூபா என்பதை உறுதிப்படுத்திய களஞ்சியப் பொறுப்பாளர் மேற்குறிப்பிட்ட தொகை பெறுமதி பொருட்கள் களவு போகவில்லை என விசாரணையின் போது ஒப்புக்கொண்டுள்ளார். இதையடுத்து. யாழ். நீதிமன்றம் கதிர்காமநாதர் களஞ்சியப் பொறுப்பாளர் என்ற ரீதியில் அவரே இக் கையாடல்களுக்கு பொறுப்பு என கருதிக் கொண்டுள்ளது.

எனவே இவ்வளவு பெருந்தொகை பெறுமதிமிக்கஅரச பொருட்கள் கையாடப்படுவதை இந்நீதிமன்றம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இக்கையாடல் பற்றிய பூரண விசாரணையை மேற்கொண்டு இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கைசமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இக்கையாடல் தொடர்பாக உரிய அறிவுறுத்தலை பெற சட்டமா அதிபருக்கு இந்நீதிமன்றம் தெரியப்படுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[க-12]

## இன்று ஒரு தகவல்

# மன்னிக்கும் இதயக்கமலம் தேவன் எழுந்தருளுமிடம்

கிறிஸ்தவ முதல்வரான இயேசுவின் முன்னால், ஒரு நாள் ஒரு ஏழை விபச்சாரியை யூதர்கள் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

இவள் இவ்வுலகில் மிகவும் பாவமான காரியங்களை செய்கிறாள். இதனால் தனக்கும், சமுதாயத்திற்கும் மிகவும் அழிவைத் தேடிக்கொள்கிறாள். எனவே நீங்கள் இதற்கு தண்டனை வழங்கவேண்டும் என கேட்டார்கள்,

அந்தப் பெண்ணை மௌனமாக சாந்த புன்னகையோடு யேசுபிரான் நிமிர்ந்து நோக்கினார். அவள் குனிந்த தலை நிமிராமல் நிலத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

உடனே அவளைச் சுற்றி நின்ற கூட்டத்தை நோக்கி இயேசுபிரான் 'உங்களில் எவர் குற்றமில்லாதவர்களோ அவர்கள் இவள் மீது முதல் கல்லை வீசுங்கள் என்றாராம் என்னஆச்சரியம்எல்லோருமே அவ்விடத்தை விட்டு சற்று நேரத்திற்குள் அகன்று விட்டனர்.

அவர்கள் அனைவருக்குமே தங்களிடையே தங்கள் உள்ளத்திற்கிடையேயுள்ள தாம் செய்த குற்றங்களையுணர்ந்தவர்கள் அதனால் எப்படி மற்றவர்களை தண்டிக்க முடியும். அதனால் விலத்திச் சென்றுவிட்டனர்.

உடனே எம்பிரான் அப்பெண்ணை நோக்கி நீ இனியாகினும் திருந்தி வாழ முற்படு. ஏனெனில் உலகில் பிழையே செய்யாதவர்கள் எவருமேயில்லை, அதனை உன் கண்முன்னாலேயே கண்டுவிட்டாய். ஆனால் செய்த பிழையையுணர்ந்துதிருந்திவாழமுற்பட வேண்டும். அதுவேதான் மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்கு சிறப்பு'' என பல அறிவுரைகளைக் கூறினார்.

பிழை செய்த அப்பெண் இறைவன் திருப்பாதங்களில் வீழ்ந்து தேம்பி தேம்பி அழுதாள். ''இனிமேல் நிச்சயம் திருந்தி வாழ்வேன், ஏனெனில் என்னை துன்புறுத்தி தங்கள் முன் இத்தனைபேர் இரக்கமில்லாமல்அழைத்துவந்தார்கள். ஆனால் அதைநீங்களோஎவரிடமும் காணாத பெரிய மனப்பாங்குடன் என்னை மன்னித்து திருந்தி வாழ வழிகாட்டினீர்கள். அதனால் நிச்சயம் என்வாழ்வு புனிதமடையும்'' என்று கூறினாள்.

பாவங்களுக்கு தண்டனை வழங்கும் இறைவனே மன்னித்தருளினார். ஆனால் எம்மவர்களிடையே எத்தனை பேரிடம் மன்னிக்கும் சுபாவம் உண்டு.

நன்றி

**போதனை களஞ்சியம்**

# விபரம் திரட்டல்

(கோப்பாய்)

யாழ்.வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென வலயத்திட்டமிடல்பிரிவினால் பாடசாலை அதிபர்களிடமிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தொடர்பானவிபரம் கோரப்பட்டுளளது. (உ-79)

# உதவுபொருள் வழங்கல்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்திலுள்ள சில பாடசாலைகளுக்கு ஜீ.ரீ.சற் நிறுவனத்தின் சுகாதார சேவைகள் திட்டத்தின் கீழ் மாணவர்களிற்கான மலசலகூடம், ஆசிரியர்கட்கானமலசலகூடம் என்பன அமைப்பதற்கான உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (உ79)

# செயற்பாட்டறை அமைத்தல்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளான நீர்வேலி சி.சி.ரி.எம்.எஸ், தோப்பு அருள்நந்தி வித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான செயற்பாட்டறை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (உ-79)

## கோப்பாயில் கலந்துரையாடல்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களை புனரமைத்தல் தொடர்பான விஷேடகலந்துரையாடல் ஒன்று இன்றுவெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் செயலகமகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய ஆய்வும் நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை கலந்துகொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். [ஸ்ரீ-79]

# தலைவர் விஜயம்

(புலோலி)

வடமராட்சிலயன்ஸ் கழகத்திற்கு பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் வி. தியாகராஜா உத்தியோக விஜயம்

# திடீர் சோதனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டிற்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினர் திடீர்சோதனை நடவடிக்கைகளில் கடந்த இரு தினங்களாக ஈடுபட்டுள்ளனர்.

அதிகாலை வேளையில் இடம்பெற்று வரும் இத் தேடுதலின் போது இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று தேடுதல் நடாத்தி வருகின்றனர்.

இத் தேடுதலின் போது பெருமளவு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆட்கள் இல்லாத வீடுகள் முக்கியமாக தீவிர சோதனைக்குள்ளாக்கப் பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

## விஜயகுமாரதுங்காவின்

# வெண்கலச் சிலையை யாழ்ப்பாணத்தில் நிறுவ முயற்சி

(வடமராட்சி கிழக்கு)

ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்காவின் வெண்கலச் சிலை யாழ். நாகவிகாரையின் முன்பாக அடுத்தவருடம் தைமாதம் பொங்கல் தினத்தன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக மொறட்டுவாவில் மேற்படி சிலை வடிவமைக்கப்படவிருக்கிறது.

இவ்வைபவம் புதிய அமைச்சரவையைச் சேர்ந்த மந்திரி ஒருவரால் ஆரம்பித்து வைக்கப்படும் என யாழ். சுதந்திரக்கட்சி அமைப்பாளர் தேவகுலநாயகம் தெரிவித்துள்ளார். (த-43)

## பண்டாரவளை பிந்துனுவெவ முகாம்

# பாதுகாப்பு அற்றது மேலிடத்திற்கு புகார்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையம் அமைந்துள்ள இடம் பாதுகாப்பு அற்றதெனச் சுட்டிக்காட்டியதாகவும் அதனை அங்கிருந்து வேறிடத்திற்கு மாற்றுமாறும் தாம் பலமுறை கோரியதாக பண்டாரவளை உதவிப் பொலிஸ் மேற்பார்வையாளர் பி.எம்.பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக பலமுறைமேல் அதிகாரிகளுடன் வாய்மொழி மூலமும்'எழுத்தினாலும் கேட்கப்பட்டது.

ஆயினும் அது அகற்றுவதற்கான முயற்சிகள் ஏதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

பின்னர் ஊவா மாகாண அதிகாரிக்கும், மாகாண சபைக்கும் இது பலமுறை கூறப்பட்டது.எனவும் அவர் மேலும் கூறினார்.

அதுமாத்திரமன்றி முன்னர் பல சந்தேகநபர்கள் தப்பியோடியதுடன் அயல் கிராமத்தவர்களிடம் மோதிய சம்பவங்களையும் நினைவு கூர்ந்தார். (க-த)

# 10 ஆயிரம்பனம்விதைகள் வடமராட்சியில் நாட்டல்

(புலோலி)

பனை அபிவிருத்திச் சபையும் வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து வடமராட்சியில் 10,000 பனை விதைகளை நாட்டி பனை அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கைகள் அல்வாயில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் பொதுமுகாமையாளர் கே. கே. குகதாஸன் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் எஸ் சோமசுந்தரம் உட்பட பிரமுகர் பலர் கலந்து கொண்டனர்.

அடுத்தகட்டப் பனைவிதைகளை நாட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இடங்களைத் தெரிவு செய்வதில் பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கணக்காளர் எஸ். கமலேஸ்வரன் மேற்கொண்டுள்ளார். (க-52)

## மட்டு. மாவட்டத்தில்

# 24வது தடவையாக வேழம்படுத்தவீராங்கனை

(சுண்டுக்குளி)

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிறுநெடுந்தீவு வாழ் மக்களின் சரீரபண்நிதிஉதவியுடனும் கலாச்சாரசபையின் அனுசரணையுடனும்பாரம்பரியகலைகள்மேம்பாட்டுக் கழகச் செயலாளர் எஸ்.மெற்றாஸ்மயிலின் தயாரிப்பில் உருவான வேழம் படுத்த வீராங்கனை ஆட்டநாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.

புலவர் ஏ.டபிள்யு. அரியநாயகம் (தலைவர் பிரதேச சபை நெடுந்தீவு) தலைமையில் நடைபெற்ற இவ் ஆட்டநாட்டுக்கூத்துநிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்னிந்தியதிருச்சபை யாழ். ஆதீனம் பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு ப. நோ. கூட்டுறவுச்சங்கச் செயலாளர் நா. சங்கரப்பிள்ளை, நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரி க. அரசரட்ணம், நெடுந்தீவு ம. வி. அதிபர் திருமதி சா. கிருஷ்ணதாஸ், சைவப்பிரகாச வித்தியாசாலை எஸ். நடராஜலிங்கம், நெடுந்தீவு றோ. கத்தோலிக்கக்கல்லூரி அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ, எஸ். எட்வேட் (சமாதான நீதவான்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலாச்சாரஉத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் நெறிப்படுத்தியதுடன் நன்றியுரையும்வழங்கினார்.(த - 110)

தியதிருச்சபை யாழ். ஆதீனம் பேராயர் அதிவண கலாநிதி

கலாச்சார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் நெறிப்படுத்தியதுடன் நன்றியுரையும்வழங்கினார். (த - 110)

# வவுனியா ரயிலில் திருடர் கை வரிசை

(வவுனியா)

வவுனியா ரயிலில் பயணம் செய்தவயோதிபர் ஒருவரிடமிருந்து60ஆயிரம்ரூபாபெறுமதியான தங்கநகைகள், பணம், உடுபுடவைகள் என்பன திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

சின்னப்புபாலசிங்கம்(வயது 70) என்ற மேற்படி வயோதிபரே இவற்றைப் பறிகொடுத்தவராவர்.

டென்மார்க்கிலிருந்து வந்த மகளைப் பார்ப்பதற்காக கொழும்புக்குச்சென்றுவிட்டு, வவுனியாவை வந்தடைய ரயிலில் பயணம் செய்துள்ளார்.

அதேவேளை ரயிலில்தன்னுடன் அருகிலிருந்த ஒருவர் சோடாஅருந்துமாறு கொடுத்ததாகவும், சோடா அருந்தியசிறிது நேரத்தில் நித்திரையாகி விட்டதாகவும், தரிப்பிடம் வந்த போது மயக்கத்திலிருந்து பயணிகளால் எழுப்பிய வேளையே மேற்படி பொருட்களை தான் இழந்திருப்பது தெரியவந்ததாகவும் கூறினார்.

இவரின் கடவுச்சீட்டு, அடையாள அட்டை என்பனவும் திருடப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்புகொழும்பிலிருந்துஇரவு ரயிலில் வவுனியா திரும்பிக் கொண்டிருந்த வவுனியா பல்கலைக்கழக மாணவியொருவரின் 50ஆயிரம் ரூபா பணமும், அடையாள அட்டைகளும் கொள்ளையடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள் வவுனியா ரயில் பயணிகளிடம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

(த)

# 500பேர் திருமலையில் காத்திருப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலையில் 500பேர் வரையில் காத்திருப்பதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பயணத்திற்கு தயாரான நிலையில் 70க்கும் மேற்பட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் காத்திருப்பதாக மேலும் அறியப்படுகிறது. (க-77)

(புலோலி)

வடமராட்சிலயன்ஸ் கழகத்திற்கு பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் வி. தியாகராஜா உத்தியோக விஜயம் ஒன்றினை மேற்கொண்டு லயன் சீமாட்டி திருமதி இரஞ்சிதமலர் சகிதம் வருகைதந்திருந்தார்.

இவ்வைபவத்தின் போது லயன்ஸ் கழகத்தின் மாவட்டத் தலைவர்களான லயன் ஏ.சி. செபநாயகம், லயன் எஸ். தங்கராஜா, லயன் ஏ. சிவசுவாமி, லயன் கே. தணிகாசலம் ஆகியோருடன் லயன்ஸ் கழகங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

பிராந்தியத் தலைவரின் வருகையை ஒட்டி பல மக்கள் வேலைத்திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டன.

அண்மையில் இடம் பெற்ற வன்செயல்களில் பாதிப்படைந்து இடம் பெயர்ந்து கரவெட்டி நாவலர் மடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள 23 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த செல்வி. அருள்ராணி கதிரவேற்பிள்ளை க. பொ. த (உயர்தர) வகுப்பு மாணவிக்கு விசேட வகை மூக்குக் கண்ணாடி பெறுவதற்காக 2,800 ரூபாவுக்கானகாசோலையும் வழங்கப்பட்டது. (க-52)

சபைத் தலைவர் எம். பாக்

கொண்டுள்ளார். (க-52)

# மட்டு. மாவட்டத்தில் சமுர்த்தி அதிகார சபை கோடிக்கணக்கில் நிதியுதவி

சமுர்த்தி அதிகார சபையினர், கடந்த 8மாத காலத்தில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 696 பேருக்கு ஒரு கோடி 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை சமூக பாதுகாப்பு நிதியாகவழங்கியிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளா ஆ. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ற்மாதம் வரையான 8 மாதங்களில் ஆயிரத்து 21 மரணங்களுக்கு 49 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாவும், ஆயிரத்து 927 திருமணங்களுக்கு 19 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாவும், 295 பிறப்புகளுக்கு 25 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், ஆயிரத்து 453 நோயாளர்களுக்கு 9 இலட்சத்து 500 ரூபாவும் சமூக பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-60)

# ஒருவாரத்தில் 3 ஹர்த்தால் கொள்வனவாளர் சிரமம்

[மட்டக்களப்பு]

கடந்த 6 நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 27 ஆம் திகதி யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்தும், 30ஆம் திகதி திங்கட்கிழமை பண்டாரவளைப் படுகொலையை கண்டித்தும், நேற்று மத்திய மாகாண படுகொலையை கண்டித்தும் அம் மாவட்டத்தில் முழு அளவிலான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்த காரணத்தினாலும் கடைகள் பூட்டப்பட்டிருந்ததனாலும் மக்கள் தமது அன்றாடப்பாவனைப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

(உ-60)

# அதிர்ச்சி அடைந்த நிலையில் சிங்கப்பூர் பிரதமர்

(சிங்கப்பூர்)

தாய்ட்பேயில் ஏற்பட்ட விமான விபத்துக் குறித்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தத சிங்கப்பூர் பிரதமர் கோச் சோவ் தோங் கூறியிருக்கிறார்.

விபத்தில் மாண்டவரின் குடும்பங்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இது தொடர்பாக பாதிக்ப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடும் மற்றும் உதவிகளையும் செய்யும்படிதான் இது தொடர்பான அமைச்சுகளுக்குப் பணித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை விபத்து வேளையில் உதவிகள் புரிந்த தாய்வான் அரச அதிகாரிகளுக்கும் அரசுக்கும் பிரதமர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (து)

# ஜப்பானில் புதியவகை கமரா கண்டு பிடிப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் சஸியோ நிறுவனம் சக்திவாய்ந்த புதுமையான கமராவொன்றினைக் கண்டுபிடித்துள்ளது.

இக்கமராவினால் எந்த விமான நிலையிலும் துல்லியமாகப் புகைப்படங்களை எடுக்க முடியும்.

குறிப்பாக தானியங்கி கமராவான இதன் மூலம் இருட்டில் கூட படம் பிடிக்கலாம் எனக்கூறப்படுகிறது.

டோக்கியோ நகரில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மேற்படி கமராவின் விலை சுமார் 2 இலட்சம் ரூபாவாகும் எனக்கூறப்படுகிறது. (த)

# விழிப்புடன் இருக்கும்படி அமெரிக்கரைக் கேட்கிறார்

## வெளியுறவு அமைச்சர்

(வாஷிங்டன்)

வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர்கேட்டுக்கொண்டார்.

பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அல்பிறட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்; அமெரிக்க கடற்படைக் கப்பல் ஜெமனில் தாக்கப்பட்டது. இதையிட்டு அமெரிக்க பயங்கரவாதத்துக்கு அடிபணியப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

கடந்த ஓரிருமாதங்களாக ஆபிரிக்க மத்திய கிழக்கு இந்தோனேசியா ஆகியநாடுகளில் அமெரிக்கர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் பல நாடுகளில் அமெரிக்க தூதர்களை திரும்ப அழைத்திருப்பதாகவும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அமெரிக்கர்கள் தங்கள் செயற்பாடுகளை வெளிநாடுகளில் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அதேவேளை மிகவிழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (து)

# தாய்லாந்தில் விரைவில் தேர்தல்

(பாங்கொக்)

தாய்லாந்தில் அடுத்த வாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட இருப்பதை வரவேற்றுள்ள பிரதமர் அறுபது நாட்களுக்குள் மீண்டும் தேர்தல் நடத்தவாய்ப்பாகஅது அமையுமென்று தெரிவித்தார்

புதிய அரசியல் சீர்திருத்தங்களுக்கு அமைய இத்தேர்தல் நடைபெற இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# டீசலிற்குப் 'பதிலாக எரிபொருள் கண்டுபிடிப்பு

## பிரிட்டன் நிபுணர் சாதனை

(இலண்டன்)

டீசலுக்கு பதிலாக பயன்படுத்தக் கூடிய புதிய எரிபொருளை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு ஈடீசல் எனவும் பெயர் சூட்டியுள்ளனர்.

ஸ்ரீவன் விட்டேகர் என்ற கண்டுபிடிப்பாளர் இந்த ஈடீசலை கண்டு பிடித்துள்ளார்.

இவர் தனது கண்டுபிடிப்பைத் தெரிவித்தபோது யாரும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர் தனது முயற்சியின் காரணமாக நிரூபித்தும் காட்டினார்.

திண்பண்டங்கள் மற்றும் அப்பளம் பொரித்த தாவர எண்ணெயின் கழிவு எண்ணெய் தான் அவர் கண்டு பிடித்த ஈடீசல் ஆகும்.

பிரிட்டனில் பிரபலமான திண்பண்டங்கள் தயாரித்து விற்கும் சம்பனியில் பயன்படுத்தப்படும் லொறிகளுக்கு ஈடீசலை பயன்படுத்தியே இயக்கப்படுகிறதாம். இந்த எரிபொருளை பயன்படுத்த வாகன என்ஜினில் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லையென்றும் கண்டுபிடிப்பாளர் நிரூபித்துள்ளார்.

மேற்படி கண்டு பிடிப்பானது இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மிகவும் பயனுடையதாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# விமான விபத்துப் பற்றி வீண் கற்பனைகள் வேண்டாம்

(தாய்வான்)

விமான விபத்துப் பற்றி வீண்கற்பனை ஊகங்களைக் கொள்வதிலும் பார்க்க, அதுபற்றிய தீவிர விசாரணைகளின் முடிவுகளை அறிவதே நல்லது என்றார் சிங்கப்பூர் விமான நிறுவன உபதலைவரும் பணிப்பாளருமான டாக்டர் சொங் சிங்சங்.

தாய்வான் ஹோட்டல் ஒன்றில் பத்திரிகையாளர் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர்மேலும் தெரிவிக்கையில்; இரண்டுகறுப்புப் பெட்டிகளும் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டனவென்றும் தெரிவித்தார்.

இதுவரை 79 பேர் பலியாகினர் என்றும் 40 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஏனையோர் சிகிச்சை முடிந்து சென்று விட்டார்கள் என்றும் தெரிவித்தார். (து-க)

# தீவிர வாதிகள் சுட்டதில் ஐந்துபொலிஸார் பலி

[அஸ்ஸாம்]

அஸ்ஸாமில் தீவிரவாதிகள் காவல்துறையினர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

அஸ்ஸாம்கோலாக் கோர் மாவட்டத்தில் றுக்கி என்ற இடத்தில் காவல்துறையினரின் காவல் சாவடியில் இவ் அனர்த்தம் இடம் பெற்றது.

பொலிஸ் காவல் சாவடியில் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை திடீரென அங்கு வந்து தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகச் சுட்டனர் இத்தீவிரவாதிகள் பொலிஸாரிடமிருந்த ஆயுதங்கள் பலவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

உலக தரிசனம்

# உலக தரிசன அறிவுப் போட்டி இ. 03

### விடைகள்

1) நாகப்பன்
2) திரிசூல்
3) கன்னடக்கவிஞர்
4) தாய்லாந்து பிரதமர் - சவான் லி பாய்
5) நாணயத்தை மடித்து
6) அவுஸ்திரேலிய சிட்னி நகரில்
7) 400
8) பாலாசி
9) பவுன்
10) ரியல்
11) டயானா
12) ஜோர்ச்வாசிங்டன்
13) ருஸோ
14) ஜப்பான்
15) றொபேட் முஹாபே
16) 6 இலட்சத்திற்கு மேல்
17) கனடா
18) பெண்
19) அஸ்ஸாம் இராணுவ ஆராய்ச்சி நிலையம்
20) செப்5
21) 8அடி 2அங்குலம்
22) ஸ்ரார் லைட்
23) அத்திக்கத்தின் சலாம்
24) விநாயகர்
25) திருவள்ளுவர் சிலை

# பொலிஸாரின் லீவுகள் ரத்து

(கொழும்பு)

பொலிஸ் பிரிவினர்க்கு வழங்கப்பட்டு வந்த லீவுகள் யாவும் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக பிரதி பொலிஸ்மா அதிபர். ரி. ஆனந்தராஜாவின் பணிப்பின்பேரிலேயே லீவுகள் மறு அறிவித்தல் வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.

மிகவும் அவசியமான காரணங்களுக்காக வழங்கப்படும் லீவு விண்ணப்பங்கள் தொடர்பாகவும் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (உ)

# உலக தரிசன அறிவுப்போட்டி -03 பரிசு பெறுவோர் விபரம்:

**முதலாம் பரிசு**

திருமதி நீறரு குணரத்தினம்
தொடர்மாடி குருநகர்

**இரண்டாம் பரிசு**

சுகந்தி குணரட்ணம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**மூன்றாம் பரிசு**

ம. சற்குணதேவி
புகையிரத வீதி
கொக்குவில் கிழக்கு

**பாராட்டுப் பரிசு பெறுவோர் விபரம்:**

அருந்ததி செல்வநாயகம்
126/4 பலாலி வீதி
திருநெல்வேலி

வேல்முருகு சரண்ணியா
தே. வீ. அதிகார சபை
சுண்டுக்குளி - யாழ்ப்பாணம்

தி. மயூரகிரி
நீர்வேலி வடக்கு

ச. சண்முகசுந்தரம்
ஜமுனா இல்லம்
அரசடி வைரவர் கோவிலடி
சங்கானை

இராசதுரை சிவசங்கர்
சிவன் வீதி
ஆவரங்கால்

வி. லம்போதரன்
வலி தென்மேற்கு பிரதேச சபை
பண்டத்தரிப்பு

தியாகராசசர்மா மயூரகிரிசர்மா
யா / இந்துக்கல்லூரி

உலக தரிசன அறிவுப்போட்டி 03ல் பலநூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டதுடன். அனேகமானோர் சரியான விடைகளை எழுதியிருந்ததனால் குலுக்கல் முறை மூலம் பரிசிற்குரியவர்களை நாம் தெரிந்தெடுத்துக் கொண்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

★ இப்போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் 'வலம்புரிக் குடும்பத்தினரின்' சார்பில் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ இப் போட்டியில் 'வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் 05-11-2000 ஞாயிறு அன்று வலம்புரிக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்; வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசில்களை வழங்குபவர்கள்

(மிகுதி நாளை தொடரும்)

**நாகம்ஸ் பாட்டா**
அங்கீகாரம் பெற்ற பாதணி விற்பனையாளர்
நாகம்ஸ் ஸ்தாபனம்
சுன்னாகம்.

# ஒபெக் நாடுகள் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துள்ளன

ஒபெக் நாடுகள் எண்ணெய் உற்பத்தியை 5000 பீப்பாக்களால் கூட்டியிருக்கின்றன.

பல வல்லரசுநாடுகள் பல சந்தர்ப்பங்களில் எண்ணெய் உற்பத்தியைக் கூட்டும்படி கோரிக்கைகள் விட்டிருந்தமையும், வேறு உலகநாடுகளின் நெருக்குதல்களும் எண்ணெய் உற்பத்தியைக் கூட்டுவதற்கு ஒபெக் நாடுகள் முன்வந்துள்ளனவென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏனைய நாடுகளும் எண்ணெய் உற்பத்தியைக்கூட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இதையடுத்து எண்ணெயின் விலை சரியலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (து)

மடியை மடியா ஒழுகல் குடியைக் குடியாக வேண்டும் பவர்.

– குறள்

# வலம்புரி

## மீண்டுமொரு சமநிலை?

இனப் பிரச்சினைக்குத் தீர்வேயில்லையா? திக்குத் திசையெல்லாம் பிரிந்து வாழும் உறவுகள் இப்பிறப்பில் ஒன்றுசேரும் வாய்ப்பே வராதா என்று ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நிகழ்வொன்று நடந்துள்ளது. நோர்வேயின்விசேட தூதுவர் எரிக் சோல்ஹைம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இது இனப்பிரச்சினை விடயத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வென்பதை மறுப்பதற்கில்லை. கடந்த பலவருட காலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் பலர் நேரடியாகவும், மறைமுகமாகவும் முயன்றுள்ளனர். அவையெல்லாம் உரிய இலக்கை அடைய முன்னதாகவேதோல்விகண்டது

ஆனால் அண்மைக்காலமாக நோர்வே அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சி வித்தியாசமாக - முன்னேற்றகரமாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. இலங்கைஇனப் பிரச்சினைக்கான தீர்வில் இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடனேயே பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் கடந்த முதலாந்திகதி இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எரிக் சோல்ஹைம் நேரடியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்நிகழ்வானதுஇனப்பிரச்சினைக்கான விடயத்தில் பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்துமென்பதில் ஐயமில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவருடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தியதன்மூலம் மீள்பரிசீலனைக்குட்படாத திடமான - தீர்க்கமான ஒரு முடிவை நோர்வே பெற்றிருக்கும் என்பதுறுதி. இனப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவரவேண்டுமாயின் ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டையும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிலைப்பாட்டையும் கேட்டறிவது மிகமிக அவசியம். அந்த இலக்கை நோர்வே சாதித்துவிட்டது.

இப்பொழுது போரென்றால் போர். சமாதானமென்றால் சமாதானம் என்ற சமநிலையில் இருதரப்பும் சந்தித்துள்ளன.

எரிக் சோல்ஹைமுடனான சந்திப்பில் தமிழ் மக்களின் அபிலாசைகளை அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடியதான உரிமைகளை - இலங்கை அரசின் கடந்தகால நடவடிக்கைகளை பிரபாகரன் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார், அது விடயத்தில் நோர்வேயின் பிரதிநிதியும் திருப்தியடைந்துள்ளார்.

எனவே இனிக் காய் நகர்த்தும் பொறுப்பு இலங்கை அரசிடமேயுள்ளது. அதனைச் செய்வதற்கானமுயற்சியில் நோர்வேயின் பிரதிநிதி ஈடுபடுவார் என்பதில்சந்தேகமில்லை. அக்காய்நகர்த்தல், பிரபாகரன் வெளிப்படுத்திய உறுதியான - அறுதியான முடிவுகளுடன் சமநிலையடைந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். இல்லாவிட்டால் மீண்டும் யுத்த மேகங்கள் இலங்கை மண்ணைச் சூழவேசெய்யும்.

---

### யாழ் பல்கலைக் கழகத்தில்

# விசேட பாட நெறிக்கு தெரிவானோரின் பெயர்ப் பட்டியல் வெளியாகிறது!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2000 - 2001 கல்வியாண்டில் கலைத்துறையில் விசேட பாடநெறிக்கு தெரிவானவர்களின் பெயர் விபரம் வருமாறு

**மொழியியல்**

எஸ். சுகந்தினி ஊரெழு மேற்கு சுன்னாகம், ஆர். சுஜாதா நல்லியாவத்தை துன்னாலை வடக்கு, எஸ். தளையசிங்கம் சிவன்கோவிலடி சாவகச்சேரி, என்.ஐ. கலாதரன் ஐயனார் கோவில் நாவற்குழி, கே. விஜித்தா 32/1 ஆசீர்வாதப்பர் றோட் நல்லூர், வி. செல்லத்துரை 936 விநாயகபுரம் துணுக்காய், எஸ். சுந்தரராசன் 501 வளநகர் யோகபுரம், மல்லாவி, எஸ். குணத்தினி 8/16 முதலாம் குறுக்குத் தெரு பிள்ளையார் கோவில் வீதி கல்லடி மட்டக்களப்பு, எஸ். லோகிதா அலுவலக வீதி பட்டிருப்பு. எஸ். மஞ்சுளா ஐயன்கேணி பாரதிவில்சேச் செங்கலடி. வி. உமாபதி தபாற்கந்தோர் வீதி கொக்கட்டிச்சோலை,

ஏ.எம். அன்ரனிற்றா அலுக்கை அளவெட்டி, சீ.ஏ சீ. தர்சினி மானிப்பாய் வீதி உடுவில், ரி. நிலாஜினி சுதுமலை கிழக்கு மானிப்பாய் எஸ். சர்மிளா மலர்மகால் அல்வாய், கே. சஜிதா 5ம் வட்டாரம் நயினாதீவு, வி. சிவாஜினி வட்டு வடக்கு சித்தன்கேணி, ரி. சிவாஜினி இராஜபதி மஞ்சத்தடி இணுவில், எஸ். சிவரஞ்சினி 249ஏ நாவலர் வீதி யாழ்ப்பாணம் எஸ். சிவதர்சினி தெல்லிப்பழை கிழக்கு, எஸ். சோபனா சிறுப்பிட்டி மேற்கு, ஜே சுபத்திரா 28/1 பிரப்பங்குளம் வீதி யாழ்ப்பாணம், வி. சுப்பிரமணியம் கல்லூரி ஒழுங்கை சங்கத்தானை, ரி. தங்கசொரூபி பண்ணாகம் தெற்கு சுழிபுரம், எஸ். திருச்செல்வம் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை தலையாளி கொக்குவில், எல். துரைரஜனி சரசாலை தெற்கு, என். குகனேஸ்வரி பிரதான வீதி கண்டாவளை பரந்தன், எம். கலைவேள்வி உருப்பிராய் கிழக்கு, என். குமாரசாமி 180 பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் முல்லைத்தீவு, எஸ். சுபதீபா மேப குஞ்சன் பாத்திமா அரிசி ஆலை முல்லை, அருள்நிதி 116 ஆலடிறோட் எஸ். கிருஷ்ணவேணி மேபா கே. சிறிகாந்தராஜா துர்க்கா பார்மஸி,

எஎ. பாமினி 38ஏ பந்திப் ஒழுங்கை மட்டக்களப்பு எஸ். திருப்பதி 5ஒலிவ் ஒழுங்கை மட்டக்களப்பு, கே. கந்தசாமி, வீ.சீ றோட் தம்பிலுவில்

**சமஸ்கிருதம்**

ரி அஜந்தகௌரி மாப்பியன் ஒழுங்கை சுதுமலை தெற்கு மானிப்பாய், எஸ். மீரா இணுவில் தெற்கு,

என். கனகசுந்தரம் மஞ்சவனப்பதி வீதி கொக்குவில் மேற்கு, எம் சுரேக்கா நாச்சிமார் கோவில் வீதி நவாலி வடக்கு, எம். சத்தியமூர்த்தி இணுவில் தெற்கு, ஐ. ஜெனித்தா காளிகோவிலடி தாவடிவடக்கு, எஸ். எஸ் கனேசரசா அருளம்பலம் ஒழுங்கை அரியாலை, ரி. சர்மிளா கே கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கு, எஸ். நிர்மலா துரை வீதி தாவடி வடக்கு, பி சோபனா செல்வகிரி சுதுமலை வடக்கு, கே விமலறமணி சுதுமலை வடக்கு மானிப்பாய், எஸ். நிதர்சினி தாவடி வீதி மானிப்பாய் கிழக்கு, எஸ். ஜெமதி உடுவில் தெற்கு சுன்னாகம், ரி தர்சினி கனகசபை வீதி மானிப்பாய்,

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட விளம்பரப்பலகையில் மேற்படி விபரங்களைப் பார்வையிடலாம் என பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

---

### சைவநற்சிந்தனை

# விவேகானந்தரின் அறிவுரை



'ஓம்' என்பது மூலமந்திரம். 'ஓம்' என்பதனுடையஸ்தூல வடிவம் இப்பிரபஞ்சம். ஓம் என்பதை அறிந்தால்இப்பிரஞ்சத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ளலாம்.

யோகங்களின் குறிக்கோள் பிரபஞ்ச ரகசியத்தை அறிதலேயாகும். ஆனால் யோகங்கள் காட்டுகின்ற மார்க்கங்கள் வெவ்வேறானவை.

ஞானயோகம் காட்டுகின்ற மார்க்கம் பக்தி யோகம், கர்மயோகம், ராஜயோகம் காட்டுகின்ற மார்க்கங்களைவிட வேறுபட்டது. ஞானயோகம் மனவுறுதி படைத்தவர்களுக்கே ஏற்றதாம். கோழைகளுக்கும், மனக்குழப்பம் உடையவர்களுக்கும் ஞானயோகம் ஏற்றதன்று.

விக்கிரக வழிபாடுஞானயோகிக்குத் தேவையில்லை. மூடக்கொள்கைகளை அவன் ஒதுக்கித் தள்ளுகின்றான். பிரபஞ்சப் பொருளில் உள்ள பற்றை ஒதுக்குகிறான். முக்தி அல்லது விடுதலை பெறுவது ஒன்றே அவனுடைய குறிக்கோள். ஞானம் இல்லாது விடுதலை பெறமுடியாது. நம்மைப் பற்றியஉண்மையைஅறிவதுதான் ஞானம். அச்சத்திற்கும், பிறப்பு இறப்புக்கும் அப்பாற்பட்டவர்கள் நாம். ஆத்மஞானம் பெறுவதற்கும் மேலான நன்மை எதுவும் இல்லை. மெய்ப்பொருள் ஞானமே எல்லா நன்மைகளுக்கும் மேலானது.

**பிரம்மம்**

இவ்வுலகை இயற்கையின் பரிணாமம் என்றும், இறைவனின் புறத்தோற்றம் என்றும் கூறுவர் மாயை என்னும்திரையின் வழியாகப் பிரம்மத்தைக் காணும்பொழுது அது இவ்வுலகமாக நமக்குக்காட்சியளிக்கிறது. ஆகையால் இவ்வுலகம் சூன்யம் அன்று. நான் இருப்பதால் நம் நிழலுக்கு இருப்பு இருப்பது போன்று, பிரம்மம் இருப்பதால் பிரபஞ்சத்துக்கு இருப்பு உண்டு. இவ்வுலகம் தோற்றமாத்திரமாய் இருக்கிறது எனவே, இவ்வுலகம் தோன்றிக் கொண்டு இருப்பது 'பிரம்மம்' உள்ளது என்பதை விளக்குகிறது.

அனைத்தையும் அறிந்து கொண்டிருக்கும் மெய்ப்பொருளை அறிவது எவ்வாறு? வேதாந்தம் கூறுவதாவது: "நாம் அதுவாக இருக்கிறோம்; அதை நாம் அறியமுடியாது; ஏனென்றால்அது ஒருக்காலும் அறியப்படும்பொருள் அன்று" தற்காலப் பௌதிக விஞ்ஞானமும் அதை அறிய முடியாது என்று தான் கூறுகிறது. மெய்ப்பொருளைப்பற்றிய ஞானம் அவ்வப் பொழுது உதிக்கிறது. இவ்வுலக மயக்கம் சிலசமயம் அகன்றபோதிலும் மீண்டும் அது நன்மை வந்து மறைக்கிறது. மாயை உண்மையை நமக்கு விளக்கிக்காட்டாது. மாயை நமக்குக் காட்டுவது கானல் நீருக்கு ஒப்பானது. இருப்பதை மறைத்து இல்லாததை இருப்பதாகக் காட்டித்தருவதுதான்மாயை. மாயை காட்டுவது சத்பொருளல்ல என்பதை நாம் அறிய வேண்டும். மாயைக்கப் பால் உள்ள மெய்ப்பொருள் எது என்பதை அறிவது தான் சமயத்தின் லட்சியமாகும். கடவுள் தான் மனிதன் என்று வேதம் சந்ததமும் புகட்டிக் கொண்டிருக்கிறது. யாரோ ஒருசிலர் தான் மாயையைக் கடந்து மாயைக்கு அப்பால் உள்ள மெய்ப் பொருளைப் பற்றிய ஞானனுபூதியைப் பெறுகிறார்கள்.

**அச்சம் ஒழி**

ஞானி ஆவதற்கு முதலில் அச்சத்தை ஒழித்தாக வேண்டும். அச்சம் கொடுமையான எதிரி. ஆராய்ந்து ஒன்றைப் பற்றிய உண்மையை அறியாத வரையில் அதனிடத்து நம்பிக்கை வைக்காதிருப்பது அடுத்த செயலாகும். "நான் தேகமல்ல, நான்மனம் அல்ல, நான் எண்ணம் அல்ல, நான் புத்தி அல்ல, நான் ஆத்ம சொரூபம்" என்று சதா சிந்தனை செய் ஆத்மாவுக்கு அந்நியமானதையெல்லாம் ஒதுக்கித் தள்ளும்பொழுது இறுதியில் ஆத்மாவே மிச்சமிருக்கும். அநித்தியமானதை ஒதுக்கித் தள்ளி அது நானல்ல என்று நினைப்பது தியானத்தில் ஒருவகை சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய ஆத்மாவே நாம் என்று நிலைநாட்டுவது தியானத்தின் இரண்டாவது வகையாகும்.

பகுத்தறிவு ஓர் எல்லை வரையில் நம்மை எடுத்துச் செல்லும். விவேகி ஒருவன் அச்சமின்றி அதைப் பின்பற்ற வேண்டும். விவேகம் நம்மை எடுத்துச் செல்லும் வரையில் நாம் செல்லவேண்டும். இடையில் நின்றுவிடக் கூடாது. எதை ஒதுக்க முடியாதோ, மறுக்க முடியாதோ அந்த மெய்ப்பொருள் நான் என்பதை உணரும் வரையில் அதற்கு அந்நியமான அனைத்தையும் ஒதுக்கித் தள்ளியாக வேண்டும். அம்மெய்ப் பொருள் தான் அனைத்துக்கும் சாட்சியாக இருக்கிறது; அது மாறாதது; அது நித்தியமானது; வரையறைக்கு உட்படாதது. அஞ்ஞானம் என்னும் திரைகள் நம் கண்களிலிருந்து அதை மறைத்து வைத்திருக்கின்றன. மறைத்து வைத்திருக்கும் நிலையிலும் ஆத்மா தன்னில் தானாக இருக்கிறது.

ஜீவாத்மனையும் பரமாத்மனையும் விளக்குவதற்கு உபநிடதத்தில் ஒரு கதை உண்டு. அக்கதையின் மூலம் ஜீவாத்மனையும், பரமாத்மனையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். ஒரு மரத்தின் மீது இரண்டு பறவைகள் அமர்ந்திருந்தன. ஒன்று மேல் கிளையிலும், மற்றொன்று கீழ் கிளையிலும் இருந்தன. மேல் கிளையில் இருந்த பறவை சாந்தமும், கம்பீரமும், கவர்ச்சியும், பூரணத்துவமும் உடையதாக விளங்கியது. கீழ் கிளையில் உள்ள பறவை கிளைக்குக் கிளை தத்திக் குதிப்பதும், இனிய பழங்களை உண்டு மகிழ்வதும், கசப்பான காய்களை உண்டு துன்புறுவதாகவும் இருந்தது.

ஒரு சமயம் அது மிகக் கசப்பான காயை உண்டது அப்பொழுது அது தனக்கு மேலுள்ள கம்பீரமான பறவையைப் பார்த்தது அப்பறவைபோல் தான் இருக்க வேண்டும் என்றுநினைத்தது. அதை நோக்கி அது தத்திக் குதித்தது. ஆனால் விரைவில் அவ் வெண்ணத்தை மறந்து முன்பிருந்த கீழ் நிலைக்கு வந்தது. மறுபடியும் இனிப்பான பழங்களையும், கசப்பான காய்களையும் புசித்து இன்பதுன்பத்துக்கு ஆளானது.

மீண்டும் அது மேல் உள்ள பறவையைப் பார்த்தது. அதனிடம் செல்ல முயன்றது. இவ்வாறு பல தடவை முயன்று மேல் உள்ள பறவைக்குப் பக்கத்தில் சென்றது மேல் உள்ள பறவையின் இறகுகளின் காந்தி அதன் கண்களைக் கூசும்படி செய்தது.

மேலே சென்ற பறவை அக்காந்தியில் மூழ்கித் தானும் அம்மேல் உள்ள பறவையும் ஒன்று என அறிந்து வியப்பில் ஆழ்ந்தது. தான் யாண்டும் அந் நிலையில்தான் இருப்பதாகவும் அப்படியிருப்பதை அறிந்து கொண்டதாகவும் உணர்ந்தது. மனிதன் அல்லது ஜீவாத்மா கீழ் உள்ள பறவைக்கு ஒப்பானவன். பரமாத்மா மேல் உள்ள பறவைக்கு ஒப்பாவார். ஜீவாத்மன் தன் முயற்சியால் மேல் நிலைக்குச் செல்லும் போது தான் யாண்டும் ஆத்ம சொரூபமாக இருப்பதை உணர்கின்றான். ஜீவாத்ம நிலை கனவு போன்றது என்பதையும் அறிகின்றான். ஜடப்பொருளிலிருந்து நம்மை விலக்கிச் சித்பொருள் நாம் என்பதை உணர்வது தான் ஞானம். ஞானி 'ஓம் - தத் – சத்' என்பதை யாண்டும் ஞாபகப் படுத்தி வருகிறான். 'ஓம்' தான் சத் அதுவே மெய்ப் பொருள். அது தான் ஞான யோகத்தின் குறிக்கோள் அதுவே அத்வைதம். இரண்டற்ற அத்வைதத்தில் ஜீவாத்மன் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்வதுதான் முக்தியாகும்.

நன்றி

**தர்மசக்கரம்**

# வை. கோ - அன்ரன் பாலசிங்கம் சந்திப்பு

## இந்திய அரசியலில் பெரும் சர்ச்சை!

(இந்தியா)



இந்தியத் தூதுக்குழுவின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் கலந்து கொள்ளச்சென்றிருந்த ம.தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சுநடத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவுதெரிவித்துவரும் வை. கோவின் இச்சந்திப்பு இந்திய அரசியலில் பெரும் சர்ச்சையையேற்படுத்தியுள்ளதாக அரசியல்நோக்குநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புடன் வை. கோ. பேச்சு நடத்தியது முற்றிலும் தவறானதென தமிழக மாநில காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

ம.தி.மு.க. தலைவர் வை. கோ. இலண்டனுக்குச் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்ததாகச் சர்வதேச செய்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்தே இக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகிறது.

## சரசாலைதெற்குப்பகுதியில் புலிகள் ஷெல் தாக்குதல்

சரசாலை தெற்கு பகுதியில் அமைந்துள்ள இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சரமாரியான ''ஆட்லறி'' ஷெல் தாக்குதலில் படைத்தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும், நால்வர் படுகாயமடைந்ததாகவும் விஷேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது

இதேவேளை மட்டுவில் தெற்கில், படையினரின் தாக்குதலில், இரண்டு புலிகள் உயிரிழந்ததாகவும் விஷேட ஊடாகத் தகவல் நிலையம்அறிவித்துள்ளது. ஸ்ரீ

## ரஷ்ய சரக்குக் கப்பல் விடுவிக்கப்பட்டது!

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினரால் எம்.ஈ உபைஸ் என்ற ரஷ்ய சரக்குக் கப்பல் கைப்பற்றப்பட்டு பின்னர் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே முல்லைத்தீவுக் கடற்பரப்பில் எதிர்பாராத வகையில் கடுமையான மோதல்கள் இடம் பெற்றதாகவும், இம்மோதலை அடுத்தே ரஷ்யாவுக்குச் சொந்தமான மேற்படி சரக்குக் கப்பல் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை இக்கப்பலில் இருந்த மாலுமிகள், கப்பற் சிற்பந்திகள் உட்பட இருபத்திரண்டு பேர் எதுவித காயங்களுமின்றி பாதுகாப்பாக விடுதலை செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## 'சாஜா'தோல்வியைஅடுத்து இந்திய அணியில் மாற்றம்!

(புதுடில்லி)

நடந்து முடிந்த சாஜா முக்கோணக் கிண்ண கிரிக்கெற் போட்டியில் இந்திய கிரிக்கெற் அணி இலங்கை அணியிடம்படுதோல்வியடைந்ததை யடுத்து.

இந்திய கிரிக்கெற் அணியிலிருந்து ஆறுபேர் நீக்கப்பட்டுள்ளதுடன் அணியில் ஐவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**நீக்கப்பட்ட ஆறு பேரின் பெயர்விபரம் வருமாறு.**

★ விஜய் தாசிஜ
★ வினோத் கம்பலி
★ றொபின்சிங்
★ பதானி
★ ஸ்ரீராம்
★ மொகமட்பாயிர்

**அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஐவரின் பெயர் விபரம் வருமாறு**

★ ஸ்ரீநாத்
★ வி.வி.எஸ் லக்ஸ்மன்
★ சடகோபன் றமேஸ்
★ சபா ஹலீம்
★ முறே கார்த்திக்

இந்திய அணியில் சேர்க்கப்பட்ட ஐவரும் விரைவில் வங்களா தீவில் நடைபெறும் கிரிக்கற் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வர். (ந)

## கிளினிக்

(யாழ்ப்பாணம்)

மடத்தடி பிரதான வீதியில் இயங்கிவரும் யூபிலி தாய் சேய் நிலையத்தில் கர்ப்பவதிகள், குழந்தைகளுக்கான சிகிச்சைகள் இன்று காலை 8 மணிமுதல் பி.ப ஒரு மணிவரை அளிக்கப்படுமென யாழ், மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (ந)

## இளம் பெண்ணின் சடலம் அரச செலவில் அடக்கம்

கடந்த திங்கட்கிழமை மாலை கரவெட்டி தச்சந்தேப்பு பகுதியில் இனம்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சுதாசரன் செல்வராணி (வயது 29) என்பவரின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சடலத்திற்கு எவரும் உரிமை கோராததை யடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஏ.கே நடராஜாவின் உத்தரவை அடுத்துமேற்படி நடவடிக்கைமேற கொள்ளப்பட்டது. (ச52-23)

## மன்னார்வங்கி கொள்ளை முயற்சி தோல்வி?

(வவுனியா)

மன்னார் மாவட்ட மக்கள் வங்கிக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

சடந்த செவ்வாய் இரவு இந்த வங்கியில் இரும்பு பொட்டக அறைக் கதவு உடைக்கப்பட்டு கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பிரதான கதவில் கொள்ளையாளரின் கைரேகை அடையளம் காணப்படுவதனால் அநுராதபுரத்தில் இருந்து கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்என்று வங்கியின் உதவிமுகாமையாளர்எஸ் குமாரகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பெலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ

### பிரதி அமைச்சர்கள் இன்று பதவியேற்பு

(கொழும்பு)

இழுபறி நிலையிலிருந்த பதினோராவது பாராளுமன்றத்தின் பிரதியமைச்சர்களின் நியமனம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது, அலரிமாளிகையில் இடம் பெறவுள்ள இந்நியமனத்தில் 32பிரதியமைச்சர்களே பதவியேற்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாண புவியியலாளன் இதழ் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக புவியியல் கழக தலைவர் த. வசந்தன் தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உட்பட கல்வியாளர் பலரும் பங்குகொள்வர். (க)

## சமாதான பேச்சு..

பேட்டி அளித்தார்.

இப்பேட்டியின் போது இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்ச் மற்றும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில்எரிக்ஷோல்ஹைமிடம் பத்திரிகையாளர் சரமாரியான கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

**பேச்சுவார்த்தையில் பிரபா ஆர்வம்**

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஆர்வமாக இருக்கும் விடுதலைப் புலிகளின தலைவர் பிரபாகரன், இத்தகைய பேச்சுவார்த்தைகளுக்கு எந்த விதமான நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. பேச்சுவார்த்தையின் போது தேவையான விதந்துரைகளையும், வழிவகைகளையும் மட்டுமே அவர் எம்மிடம் தெரிவித்துள்ளார்?

வன்னியில் உணவு, மற்றும் மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றதென்றும், அதனால் மக்களின் வாழ்க்கை நிலை மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகவும். யுத்தத்திற்கான காரணங்களைத் தங்களால் உணர்ந்து கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவித்த எரிக்ஷோல்,

வன்னியில் சமயத்தலைவர்கள், கல்விமான்கள், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் சந்தித்துப் பேசியுள்ளோம் என்றும் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

**மீண்டும் பேச்சு நடத்துவேன்**

தற்போதைய பேச்சுவார்த்தை தொடருமா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த எரிக்ஷோல்ஹைம் மீண்டும் தான் வன்னிக்குச் சென்று பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஐந்துவருடங்களாக புலிகளுடன பேசுவதற்கொகன்றுமில்லாத நிலையில் இப்போது பிரபாகரன் எம்முடன் பேசியிருப்பது வரலாற்றுச் சிறப்பானதொன்று மட்டுமல்லாமல் சமாதானப்பேச்சுவார்த்தையின் ஒரு திருப்புமுனையென்றும் கூறினார்.

**பேச்சு வார்த்தை பற்றி இந்தியாவுக்கு தெரியப்படுத்தப் படும்**

இதே வேளை புலிகளுடனும் அரசாங்கத்துடனும் இடம்பெறும்பேச்சு வார்த்தை குறித்து அவ்வப்போது இந்தியாவிற்குத் தெரிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகாவும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கேட்டுக் கொண்டதற்காகவே பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை உருப்பெற்றதாகவும் எரிக்ஷோல்ஹைம் தெரிவித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்வையே நாம் விரும்புகிறோம்என்றும்ஷோல்ஹைம் மேலும்தெரிவித்துள்ளார். (வ

## யாழ்...

இவ் அறிவித்தலில், உங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தவிர வேறு எவரையும் வீடுகளில் வைத்திருக்க வேண்டாமென்றும், அப்படி யாராவது இருந்தால் உடனடியாக அருகில் உள்ள இராணுவ முகாமில் அறிவிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

இத்தேடுதலின் போது பெருமளவு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு வருவதுடன், குடாநாட்டின் பிரதான வீதிகள், குறுக்கு வீதிகள் தோறும் வீதித்தடைகள் போடப்பட்டு மக்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

கொக்குவில், சோண்டாவில், உரும்பராய், கோப்பாய், நச்சிமார்கோவிலடி, திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, வண்ணார் பண்ணை போன்ற இடங்களில் உள்ள மக்களின் வீடுகளில் தீவிர தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## விடுதலை

யப்பட வேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும் என நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டினார்.

பண்டாரவளை விந்துனுவெவ சம்பவம் உட்பட அவற்றுக்கு பின்னர் ஏற்பட்ட குழப்பநிலைபற்றி ஐக்கிய தேசிய கட்சியின் மீது குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை என்றும் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய விசனம் தெரிவித்தார். (ந-5)

## தந்தை..,

தீவைப்புச் சம்பவங்களை அடுத்தே இந்த இரு சகோதரிகளும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகவும, அதனை அடுத்து அவர்களது தந்தையான 90வயது வயோதிபர் வெட்டிக் கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கிராமவாசிகள் சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ)

## வத்தளையில் திகில் சம்பவம் தமிழ்பெண்கள் இருவர்மீது பாலியல் வல்லுறவு

[கொழும்பு]

வத்தளை குனுப்பிட்டிய பகுதியில் பிறந்தநாள கொண்டாடியவர்கன் வீட்டிலுள் நுழைந்த இனந்தெரியாதோர் இளம் பெண்கள் இருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

கிரான்பாஸில்இருந்தும், கொட்டாஞ்சேனையிலிருந்தும் வத்தளைக்கு வந்த தமிழ் பெண்கள் இருவரும். பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த போது திடீர் என வீட்டினுள் நுழைந்த ஐந்து இளைஞர்கள் இரு பெண்களையும் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது நான்கு பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந)

## மூன்று

யுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு 7 மணிமுதல் 8.30 மணி வரை மேற்கு வானில் தொடுவானத்திற்கு மேல் 22 பாகையில் சுக்கிரனைப் பார்க்க முடியும், சனி வியாழன் ஆகிய கிரகங்களை இரவு 9 மணியின் பின்னர் தொடுவானத்திற்கு மேல் முறையே 20,10 பாகைகளில் தெளிவாகப் பார்க்கமுடியும்.

அதிகாலை வேளையில் தெற்குவானில் இம் மூன்று கிரகங்களையும் ஒன்றாக அவதானிக்க முடியுமென்றும் வானிலை அவதானநிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.